# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2257/28 - 2021 දෙසැම්බර් මස 08 වැනි බදාදා - 2021.12.08

2257/28 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 08 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.பி. - 21/78 (XV) (ஆ)

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்

21 ஆம் பிரிவு மற்றும் 139 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27 (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் தினேஸ் குணவர்த்தன ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின்மீது, மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 139 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றாகக் கருதப்படுகின்றதும், இலங்கை, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் பீடங்களையும் துறைகளையும் குறித்துரைக்கின்றதும், (காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறானதும்), 2009 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆந் திகதிய 1603/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான அட்டவணையை, (2019, ஏப்பிறல் 30 ஆந் திகதிய 2121/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையிற் குறித்துரைக்கப்பட்ட) அதன் நிரல் I இலும் நிரல் II இலுள்ள அதன் நேரொத்த பதிவுகளிலும் காணப்படும் “இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடம்” என்னும் விடயத்தை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்:-

1A - PG 5645 - 611 (2021/12)

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

| *நிரல் I* | *நிரல் II* |
|---|---|
| *பீடம்* | *துறை* |
| பல் மருத்துவ விஞ்ஞான பீடம் | 1. சமுதாய பல் மருத்துவ சுகாதாரத் துறை |
| | 2. மீட்பாக்கப் பல் மருத்துவத் துறை |
| | 3. எல்லாமடக்கிய மற்றும் முதியோர் பல் மருத்துவத் துறை |
| | 4. வாய் மருத்துவ மற்றும் பற்கற்றிழையத் துறை |
| | 5. வாய் நோயியல் துறை |
| | 6. வாய் அறுவை சிகிச்சைத் துறை |
| | 7. துணை மருத்துவ விஞ்ஞானத் துறை |
| | 8. அடிப்படை விஞ்ஞானத் துறை |
| | 9. செயற்கைப் பல்லியல் துறை |

**தினேஸ் குணவர்த்தன,**
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2021, திசெம்பர் 03.

EOG 12 - 0065

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.